துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்களை – நேற்று அவரது இல்லத்தில், துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று கீழ்ப்பாக்கத்தில் உள்ள இனமானப் பேராசிரியர் அவர்களின் இல்லம் சென்று, இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன், பேரன் அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களை நேற்று அவரது இல்லத்தில், துணை முதல்வராக அறிவிக்கப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதை முன்னிட்டு உதயநிதி ஸ்டாலின் அவர்களை, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில்

9 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை,செப்.30-

தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது குறித்து, சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஞாயிற்றுக்கிழமை (செப். 29) - தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

திங்கள்கிழமை (செப். 30) - தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மாநகரின் ஒரு சில பகுதிகளில் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (செப். 29) பகல் 12.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாக மணப்பாறையில் 11 மி.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

இன்றும், நாளையும், மன்னார் வளைகுடா, தென்தமிழகக் கடலோரப் பகுதிகள், அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகள், தென்மேற்கு அரபிக்கடலின் மேற்கு பகுதிகள், அதனை ஒட்டிய மத்திய மேற்கு அரபிக்கடல் பகுதிகள், கேரள கடலோரப் பகுதிகள், லட்சத்தீவுப் பகுதிகளில் சூறாவளிக்காற்று வீசக்கூடும்.

எனவே, மேற்கண்ட நாள்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

புதிய அமைச்சர்களுக்கு - துறைகள் ஒதுக்கீடு!

சென்னை, செப். 30 -

தமிழ்நாடு அமைச்சரவையில் புதிய அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்ட 4 பேருக்கும் துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றுள்ள செந்தில் பாலாஜிக்கு ஏற்கெனவே அவர் வகித்து வந்த மின்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் ஆர்.ராஜேந்திரனுக்கு சுற்றுலாத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கரும்பு, கரும்பு ஆயத்தீர்வை மற்றும் கரும்பு பயிர் மேம்பாடு ஆகிய துறைகளும் ராஜேந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சா.மு.நாசருக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயலகத் தமிழர் நலன் ஆகிய துறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் கோவி. செழியனுக்கு தொழில்நுட்பக்கல்வி உள்ளிட்ட உயர்கல்வித்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்த்து!

தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தார்!

சென்னை.செப்.30-

தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் பொறுப்பு நேற்று வழங்கப்பட்டதறிவோம்.

புதிய துணை முதலமைச்சராகப் பதவி உயர்வு பெற்ற அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலரும் நேரில் சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் அலைபேசி மூலம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களைத் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

கலைஞானி கமல்ஹாசன் வாழ்த்து!

வலைதளத்தில் பதிவு!

சென்னை, செப்.30-

துணை முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு:-

தமிழ்நாட்டின் துணை முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தாங்கள், இன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும், தமிழக மக்களின் மீதும் உறுதிமொழி எடுத்துக்கொண்டுள்ளீர்கள் அவர்கள் இருவருக்கும் நீங்கள் உண்மையாக சேவை செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு கலைஞானி கமல்ஹாசன் பதிவிட்டுள்ளார்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. ஏற்பாட்டில்! கழக மகளிரணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் 100 வினாடி-வினா 2ஆம் சுற்றுப் போட்டி!

எழுத்தாளர் கோ.வி. லெனின் ஒருங்கிணைத்து நடத்தினார்!

கோவை, செப்.30-

கோவை வரதராஜபுரம் சாய்விவாகா மகால் அரங்கில், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக ஏற்பாட்டில்,கழக மகளிரணி சார்பில் நடைபெற்ற, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் 100 வினாடி வினா போட்டியின் 2 ஆம் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

கலைஞர் 100 வினாடி வினா போட்டி நிகழ்ச்சியை, எழுத்தாளர் கோ.வி. லெனின் ஒருங்கிணைத்தார்.

இந்நிகழ்வில், கழக மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,

கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, கழக பிரச்சாரக்குழு செயலாளர் உமாமகேஸ்வரி,மாநில மகளிர் தொண்டரணி துணைச்செயலாளர் சத்யா பழனிகுமார்,மாநில ஆலோசனை குழு உறுப்பினர் மலர் மரகதம்,மாநில தீர்மானக்குழு உறுப்பினர் மு.ரா.செல்வராஜ்,

மாநகர் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ்,ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் அன்னம்மாள் ராஜா,கனிமொழி ஜெயலலிதா, கவிதா, ரங்கநாயகி,

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக்,சிங்கை பகுதி 2 திமுக செயலாளர் சிங்கை மு.சிவா, பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி புஷ்பராஜ்,

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிரணி மகளிர் தொண்டரணி தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள்,

கழக நிர்வாகிகள், பள்ளி, கல்லூரி மாணவ,மாணவிகள், வட்டக்கழகச் செயலாளர்கள், தி.மு.க. சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டனர். வினாடி வினா நிகழ்ச்சியில் திரளான கல்லூரி மாணவ -மாணவியர் கலந்து கொண்டனர். வினாடி வினா நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவ -மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.09.2024) சென்னையில், Council for Leather Exports, India, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் பெருநகர சென்னை மாநகர காவல்துறை ஆகியவை இணைந்து நடத்தும் Soles for Souls Marathon 2024 போதை பொருள் இல்லாத சமூகத்திற்கான விழிப்புணர்வு மாராத்தான் போட்டி நிறைவு விழாவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் Council for Leather Exports, India தலைவர் ராஜேந்திர குமார் ஜலான், நிர்வாக இயக்குநர் செல்வம், கூடுதல் காவல்துறை இயக்குநர் டாக்டர்.அமல்ராஜ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒடிசா மாநில வர்த்தகம் - போக்குவரத்து துறை அமைச்சர் ஸ்ரீ பிபூதி பூஷன் ஜெனாவுடன்

சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் ஆலோசனை!

போக்குவரத்துக் கழக தலைமையகத்தில் நடைபெற்றது!

சென்னை,செப்.30-

ஒடிசா மாநில வர்த்தகம் மற்றும் போக்குவரத்து, எஃகு மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர், ஸ்ரீ பிபூதி பூஷன் ஜெனாவுடன், இன்று (29.09.2024), சென்னை, மா.போ.க தலைமையகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கிஸ், தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஒடிசா மாநில வர்த்தகம் மற்றும் போக்குவரத்து, எஃகு மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர், ஸ்ரீ பிபூதி பூஷன் ஜெனா மற்றும் ஒடிசா மாநில சாலைப் போக்குவரத்துக் கழக தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் தேப்டேஷ்பட்நாயக், ஆகியோர் நேற்று (29.09.2024), சென்னை, மா.போ.க. தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கிஸ். தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகம், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களின், பேருந்து சேவைகளின் வகைகள், பேருந்து கொள்முதல் முறைகள், நிர்வாக அமைப்பு, தொழில்நுட்பப் திறன், பணிமனைகளின் மேலாண்மை மற்றும் செயல்பாடுகள், பல்வேறு அரசு மானியங்களின் விவரங்கள், நிதி செயல்திறன் மற்றும் ITMS உட்பட புதியதாக மேற்கொள்ள இருக்கும் திட்டங்கள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் , மாநகர் போக்குவரத்துக் கழக, மத்திய பணிமனையில் பேருந்துகளில் நடைபெறும் பராமரிப்பு பணிகளையும் பார்வையிட்டார். மேலும் அமைச்சர் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் இரா. மோகன், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், போக்குவரத்துத் துறை தலைவர் அலுவலக தனி அலுவலர் ஜி.செல்வன், பொது மேலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்க

முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் பொன். நாகராஜன் பணி ஓய்வு பாராட்டு விழா!

ஏ.எம்.வி. பிரபாகராஜா எம்.எல்.ஏ. வாழ்த்துரை! அ.கதிரேசன் தலைமை!

சென்னை, செப். 30 -

மாநகரப் போக்குவரத்து கழகத்தில் 29 ஆண்டுகளாக நடத்துனராக பணிபுரிந்தும் மாநகர ஊழியர் முன்னேற்ற சங்கத்தில் முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினரும் வாலாஜா ஒன்றியம் முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளருமான பொன்.நாகராஜன் பணிபுரிந்து ஓய்வு பெறுகிறார்.

அவருக்கு பாராட்டு விழா இன்று (30 -09 - 2024) மாலை 6 மணி அளவில் கலைஞர் நகர் ராஜமன்னார் சாலையில் உள்ள சமூக நலக்கூடத்தில் பாராட்டு விழா நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகராஜா வாழ்த்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் கலைஞர் நகர் பணிமனை நடத்துனர் செயலாளரும் 137 வது ஆவட்டச் செயலாளருமான அ.கதிரேசன் தலைமை தாங்குகிறார்.

மாநகரப் போக்குவரத்து கழக இணை செயலாளர் கோபி முன்னிலை வகிக்கிறார். பணிமனை செயலாளர்கள் ராஜசேகரன் சரவணன் வரவேற்புரை ஆற்றுகிறார்கள் இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகளும் தொழிலாளர் நண்பர்களும் திரளாக கலந்து கொள்கிறார்கள்.